NEW YORK
TAMIL ACADEMY

Nilai 6 — குறள் தேனீ (Kural Theni) 45 verses

Rules summary

- **Round 1:** Recite the 45 Kural verses, preferably in list order, from memory, max 12 minutes.
- **Tie-breaker:** Judges will specify the starting or middle word of any 8 Kurals for students to recite with their meaning in Tamil, max 5 minutes.
- *Students must recite with clarity, fluency and proper pronunciation to get full points.*
- *Students must provide the meaning in Tamil. The use of English words is permitted; however, it may result in a deduction of points.*
- *Points will be deducted for incomplete/partial recitals.*
- *Points will be deducted for each prompt or hint provided by the judges.*
- **Competition Date:** 18 Dec 2026
- **Mode of Competition:** Virtual *(The competition mode must be uniform per Nilai and conducted in a single format)*

குறள் தேனீ – குறள் ஒப்புவித்தல்

1. குறள் 102

அதிகாரம் **(Chapter):** செய்ந்நன்றி அறிதல் / Gratitude

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

பொருள் **(Tamil meaning):** நமக்கு நெருக்கடியான நேரத்தில் ஒருவர் செய்த உதவி, அளவில் சிறியது என்றாலும், உதவிய நேரத்தை எண்ணும்போது அது இந்த உலகத்தை விட மிகப் பெரியதாகும்.

English: A favour conferred in the time of need, though it be small (in itself), is (in value) much larger than the world

2. குறள் 137

அதிகாரம் **(Chapter):** ஒழுக்கமுடைமை / The Possession of Decorum

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

பொருள் **(Tamil meaning):** ஒழுக்கத்தினால் உயர்வை அடைவர்; ஒழுக்கம் இல்லாதவர் வேண்டாத பழியை அடைவர்.

English: From good conduct/discipline men obtain greatness; from bad conduct comes insufferable disgrace.

3. குறள் 291

அதிகாரம் **(Chapter):** வாய்மை / Veracity

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

பொருள் **(Tamil meaning):** உண்மை என்று சொல்லப்படுவது எது என்றால், எவர்க்கும் எத்தகைய தீங்கையும் தராத சொற்களைச் சொல்வதே ஆகும்.

English: Truth is the speaking of such words as are free from the least degree of evil (to others).

4. குறள் 411

அதிகாரம் **(Chapter):** கேள்வி / Listening

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

பொருள் **(Tamil meaning):** காதால் கேட்டுப் பெறும் செல்வமே சிறந்த செல்வம்; இது பிற செல்வங்கள் எல்லாவற்றிலும் முதன்மையானது.

English: Wealth (gained) by the ear(listening) is wealth of wealth; that wealth is the chief of all wealth.

5. குறள் 11

அதிகாரம் **(Chapter):** வான்சிறப்பு / The Blessing of Rain

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.

பொருள் **(Tamil meaning):** மழை பெய்ய உலகம் வாழ்ந்து வருவதால், மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணரத்தக்கதாகும். (அல்லது) வானத்தில் இருந்து பூமிக்கு வரும் மழையானது பூமியில் உயிர்கள் வாழ உதவுவதால், மழை அமிழ்தம் போன்றது.

English: By the continuance of rain the world is preserved in existence; it is therefore worthy to be called ambrosia(food of the Gods)

6. குறள் 391

அதிகாரம் **(Chapter):** கல்வி / Learning

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

பொருள் **(Tamil meaning):** கற்கத் தகும் நூல்களைப் பிழை இல்லாமல் கற்க வேண்டும்; கற்ற பிறகு கற்ற கல்விக்கு ஏற்ப நல்ல வழிகளில் வாழ வேண்டும்

English: Let a man learn thoroughly whatever he may learn, and let his conduct be worthy of his learning.

7. குறள் 788

அதிகாரம் **(Chapter):** நட்பு / Friendship

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

பொருள் **(Tamil meaning):** பலர் முன்னே ஆடை நழுவும்போது உடனே சென்று உதவும் கை போல, நண்பனுக்குத் துன்பம் வந்த போது உடனே சென்று போக்குவதே நட்பு.

English: (True) friendship hastens to the rescue of the afflicted (as readily) as the hand of one whose garment is loosened (before an assembly).

8. குறள் 1

அதிகாரம் **(Chapter):** கடவுள் வாழ்த்து / The Praise of God

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

பொருள் **(Tamil meaning):** எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

English: A, as its first of letters, every speech maintains; The "Primal Deity" is first through all the world's domains

9. குறள் 108

அதிகாரம் **(Chapter):** செய்ந்நன்றி அறிதல் / Gratitude

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

பொருள் **(Tamil meaning):** ஒருவன் நமக்குச் செய்த உதவியை மறப்பது அறம் அன்று; அவன் செய்த தீமையை அப்போதே மறப்பது அறம்.

English: It is not good to forget a benefit; it is good to forget an injury even in the very moment (in which it is inflicted).

10. குறள் 616

அதிகாரம் **(Chapter):** ஆள்வினையுடைமை / Manly Effort

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்

பொருள் **(Tamil meaning):** முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும், முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையைச் சேர்த்துவிடும்.

English: Exertion leads to success; Lack of it to failure.

11. குறள் 423

அதிகாரம் **(Chapter):** அறிவுடைமை / The Possession of Knowledge

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

பொருள் **(Tamil meaning):** எதைபற்றியும் யார் யார் என்ன சொல்ல கேட்பினும் அதைப்பற்றிய உண்மையான பொருளை காண்பதே அறிவு.

English: To discern the truth in every thing, by whomsoever spoken, is wisdom.

12. குறள் 71

அதிகாரம் **(Chapter):** அன்புடைமை / The Possession of Love

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

பொருள் **(Tamil meaning):** அன்பிற்கும் கூடப் பிறர் அறியாமல் தன்னை மூடி வைக்கும் கதவு உண்டோ? இல்லை. தம்மால் அன்பு செய்யப்பட்டவரின் துன்பத்தைக் காணும்போது வடியும் கண்ணீரே அன்பு உள்ளத்தைக் காட்டிவிடும்.

English: Is there any fastening that can shut in love? Tears of the affectionate will publish the love that is within

13. குறள் 127

அதிகாரம் **(Chapter):** அடக்கமுடைமை / The Possession of Self-restraint

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

பொருள் **(Tamil meaning):** எதைக் காக்க முடியாதவரானாலும் நாக்கு ஒன்றையாவது காத்துக் கொள்ள வேண்டும். முடியாது போனால் சொல்குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர்

English: Whatever besides you leave unguarded, guard your tongue; otherwise errors of speech and the consequent misery will ensue.

14. குறள் 400

அதிகாரம் **(Chapter):** கல்வி / Education

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை

பொருள் **(Tamil meaning):** கல்வியே அழிவு இல்லாத சிறந்த செல்வம்; மற்ற பொருள்கள் எல்லாம் செல்வமே அல்ல.

English: Learning is the true imperishable riches; all other things are not riches.

15. குறள் 35

அதிகாரம் **(Chapter):** அறன் வலியுறுத்தல் / Assertion of the Strength of Virtue

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

பொருள் **(Tamil meaning):** பொறாமை, ஆசை, சினம் (கோபம்), கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் அவற்றைப் போக்கி (நீக்கி) வாழ்வதே அறமாகும்.

English: That conduct is a virtue which is free from these four things, viz, malice, desire, anger and bitter speech.

16. குறள் 129

அதிகாரம் **(Chapter):** அடக்கமுடைமை / The Possession of Self-restraint

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

பொருள் **(Tamil meaning):** தீயினால் பட்ட காயம் ஆறிப்போகும், ஆனால் கொடிய வார்த்தைகளால் நெஞ்சைச் சுட்ட வடு நாளும் ஆறாது.

English: The wound which has been burnt in by fire may heal, but a wound burnt in by the tongue will never heal sequent misery will ensue

17. குறள் 314

அதிகாரம் **(Chapter):** இன்னாசெய்யாமை / Not doing Evil

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

பொருள் **(Tamil meaning):** நமக்குத் தீமை செய்தவரைத் தண்டிக்கும் வழி, அவர் வெட்கப்படும்படி அவருக்கு நன்மையைச் செய்து அவர் செய்த தீமையையும், நாம் செய்த நன்மையையும் மறந்துவிடுவதே.

English: The (proper) punishment to those who have done evil (to you), is to put them to shame by showing them kindness, in return and to forget both the evil and the good done on both sides.

18. குறள் 645

அதிகாரம் **(Chapter):** சொல்வன்மை / Power of Speech

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.

பொருள் **(Tamil meaning):** தாம் சொல்லும் சொல்லை வெல்ல, வேறொரு சொல் இல்லை என்பதை அறிந்து சொல்லுக.

English: Deliver your speech, after assuring yourself that no counter speech can defeat your own.

19. குறள் 106

அதிகாரம் **(Chapter):** செய்ந்நன்றி அறிதல் / Gratitude

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

பொருள் **(Tamil meaning):** உன் துன்பத்துள் துணையாக நின்றவரின் நட்பை விடாதே; அறிவு ஒழுக்கங்களில் குற்றம் இல்லாதவரின் நட்பை மறந்து விடாதே.

English: Forsake not the friendship of those who have been your staff in adversity Forget not be benevolence of the blameless

20. குறள் 619

அதிகாரம் **(Chapter):** ஆள்வினையுடைமை / Manly Effort

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்

பொருள் **(Tamil meaning):** கடவுளே நமக்கு உதவ முடியாது போனாலும், முயற்சி நம் உடல் உழைப்பிற்கு ஏற்ற பலனைத் தரும்.

English: Although it be said that, through fate, it cannot be attained, yet labour, with bodily exertion, will yield its reward.

21. குறள் 20

அதிகாரம் **(Chapter):** வான் சிறப்பு / The Blessing of Rain

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்

வான்இன்று அமையாது ஒழுக்கு
பொருள் **(Tamil meaning):** எத்தனை பெரியவரானாலும் நீர் இல்லாமல் வாழமுடியாது; அந்த நீரோ மழை இல்லாமல் கிடைக்காது

English: If it be said that the duties of life cannot be discharged by any person without water so without rain there cannot be the flowing of water.

22. குறள் 104

அதிகாரம் **(Chapter):** செய்ந்நன்றி அறிதல் / Gratitude

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

பொருள் **(Tamil meaning):** தினை அளவாக மிகச் சிறிய உதவியே செய்யப்பெற்றிருந்தாலும் உதவியின் பயனை நன்கு அறிந்தவர் அதைப் பனை அளவு மிகப் பெரிய உதவியாய்க் கருதுவர்.

English: Though the benefit conferred be as small as a millet seed, those who know its advantage will consider it as large as a palmyra fruit.

23. குறள் 121

அதிகாரம் **(Chapter):** அடக்கமுடைமை / The Possession of Self-restraint

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

பொருள் **(Tamil meaning):** பணிவு தெய்வீகமானவர்களுடன் சேர்க்கும். பணிவற்ற தன்மை மீளமுடியாத இருட்டில் சேர்த்து விடும்.

English: Self-control will place (a man) among the Gods; the want of it will drive (him) into the thickest darkness (of hell)

24. குறள் 396

அதிகாரம் **(Chapter):** கல்வி / Learning

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

பொருள் **(Tamil meaning):** மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்க்கு நீர் ஊறும், அதுபோல் மக்களின் அறிவு அவர்கள் கற்றக் கல்வியின் அளவிற்கு ஊறும்.

English: Water will flow from a well in the sand in proportion to the depth to which it is dug, and knowledge will flow from a man in proportion to his learning.

25. குறள் 786

அதிகாரம் **(Chapter):** நட்பு / Friendship

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.

பொருள் **(Tamil meaning):** பார்க்கும்போது மனம் மகிழாமல், முகம் மட்டுமே மலரப் பழகுவது நட்பு அன்று. அன்பால் மனமும் மலரப் பழகுவதே நட்பு.

English: The love that dwells (merely in the smiles of the face is not friendship; (but) that which dwells deep in the smiles of the heart is true friendship.

26. குறள் 240

அதிகாரம் **(Chapter):** புகழ் / Renown

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

பொருள் **(Tamil meaning):** தாம் வாழும் வாழ்க்கையில் பழி உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழ்கின்றவர், புகழ் உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழாதவர்.

English: Those live who live without disgrace. Those who live without fame live not.

27. குறள் 12

அதிகாரம் **(Chapter):** வான்சிறப்பு / The Blessing of Rain

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

பொருள் **(Tamil meaning):** உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு, பருகுவோர்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும்.

English: Rain produces good food, and is itself food.

28. குறள் 131

அதிகாரம் **(Chapter):** ஒழுக்கமுடைமை / The Possession of Decorum

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

பொருள் **(Tamil meaning):** ஒழுக்கம், அதை உடையவர்க்குச் சிறப்பைத் தருவதால் உயிரைக் காட்டிலும் மேலானதாக அதைக் காக்க வேண்டும்.

English: Discipline/Good conduct leads to eminence, it should therefore be preserved more carefully than life.

29. குறள் 138

அதிகாரம் **(Chapter):** ஒழுக்கமுடைமை / The Possession of Decorum

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

பொருள் **(Tamil meaning):** நல்லொழுக்கம் இன்பமான நல்வாழ்க்கைக்குக் காரணமாக இருக்கும்; தீயொழுக்கம் எப்போதும் துன்பத்தைக் கொடுக்கும்.

English: Propriety of conduct is the seed of virtue; impropriety will ever cause sorrow.

30. குறள் 294

அதிகாரம் **(Chapter):** வாய்மை / Veracity

உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்.

பொருள் **(Tamil meaning):** ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் இல்லாமல் நடப்பானானால் அத்தகையவன் உலகத்தாரின் உள்ளங்களில் எல்லாம் இருப்பவனாவான்.

English: He who, in his conduct, preserves a mind free from deceit, will dwell in the minds of all men.

31. குறள் 467

அதிகாரம் **(Chapter):** தெரிந்துசெயல்வகை / Acting after due Consideration

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

பொருள் **(Tamil meaning):** ஒரு செயலைச் செய்து முடிக்கும் வழியை அறிந்து தொடங்குக. தொடங்கியபின் அது பற்றி எண்ணிக் கொள்வோம் என்பது குற்றம்.

English: Consider, and then undertake a matter; after having undertaken it, to say "We will consider," is folly

32. குறள் 611

அதிகாரம் **(Chapter):** ஆள்வினையுடைமை / Manly Effort

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

பொருள் **(Tamil meaning):** நம்மால் இதைச் செய்யமுடியாது என்று மனம் தளரக்கூடாது. அதைச் செய்து முடிக்கும் ஆற்றலை முயற்சி தரும்.

English: Yield not to the feebleness which says, "this is too difficult to be done"; labor will give the greatness (of mind) which is necessary (to do it).

33. குறள் 293

அதிகாரம் **(Chapter):** வாய்மை / Veracity

தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

பொருள் **(Tamil meaning):** பொய் என்று உள்ளம் உணர்த்துவதைச் சொல்ல வேண்டா. சொன்னால், அதைப் பொய் என்று உலகு அறிய நேரும்போது தன் மனமே தன்னைச் சுடும்.

English: Let not a man knowingly tell a lie; for after he has told the lie, his mind will burn him (with the memory of his guilt).

34. குறள் 1031

அதிகாரம் **(Chapter):** உழவு / Farming

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

பொருள் **(Tamil meaning):** உழவுத் தொழிலில் இருக்கும் நெருக்கடிகளை எண்ணி, வேறு வேறு தொழிலுக்குச் சென்றாலும் உலகம் ஏரின் பின்தான் இயங்குகிறது. அதனால் எத்தனை வருத்தம் இருந்தாலும் உழவுத் தொழிலே முதன்மையானது.

English: Agriculture, though laborious, is the most excellent (form of labor); for people, though they go about (in search of various employment), have at last to resort to the farmer.

35. குறள் 100

அதிகாரம் **(Chapter):** இனியவைகூறல் / The Utterance of Pleasant Words

இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.

பொருள் **(Tamil meaning):** இனிய சொற்கள் இருக்கும் போது அவற்றை விட்டுக் கடுமையான சொற்களைக் கூறுதல் கனிகள் இருக்கும் போது அவற்றை விட்டு காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றது.

English: To say disagreeable things when agreeable are at hand is like eating unripe fruit when there is ripe.

36. குறள் 221

அதிகாரம் **(Chapter):** ஈகை / Giving

வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

பொருள் **(Tamil meaning):** ஏதும் இல்லாதவர்க்குக் கொடுப்பதே ஈகை; பிற எல்லாம் கொடுத்ததைத் திரும்பப் பெறும் நோக்கம் உடையதே.

English: To give to the destitute is true charity. All other gifts have the nature of (what is done for) a measured return.

37. குறள் 783

அதிகாரம் **(Chapter):** நட்பு / Friendship

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

பொருள் **(Tamil meaning):** படிக்கும்போது எல்லாம் மகிழ்ச்சி தரும் நூலின் இன்பம் போல நல்ல குணமுள்ளவரோடு கொண்ட நட்பு அவரோடு பழகும் போதெல்லாம் மகிழ்ச்சி தரும்.

English: Like learning, the friendship of the noble, the more it is cultivated, the more delightful it becomes.

38. குறள் 942

அதிகாரம் **(Chapter):** மருந்து / Medicine

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.

பொருள் **(Tamil meaning):** ஒருவன் முதலில் உண்டது சீரணமாகிவிட்டதை நன்கு அறிந்து அதன் பிறகு உண்டால், அவன் உடம்புக்க மருந்து என்று ஒன்று வேண்டியது இல்லை.

English: No medicine is necessary for him who eats after assuring (himself) that what he has (already) eaten has been digested.

39. குறள் 999

அதிகாரம் **(Chapter):** பண்புடைமை / Courtesy

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்.

பொருள் **(Tamil meaning):** நல்ல பண்பு இல்லாததால் மற்றவர்களுடன் கலந்து பேசி மனம் மகிழும் இயல்பு இல்லாதவர்க்கு, இந்தப் பெரிய உலகம் இருள் இல்லாத பகல் பொழுதிலும் கூட இருளிலே இருப்பது போலவாம்.

English: To those who cannot rejoice, the wide world is buried in darkness even in (broad) daylight.

40. குறள் 118

அதிகாரம் **(Chapter):** நடுவு நிலைமை / Impartiality

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.

பொருள் **(Tamil meaning):** முதலில் சமமாக நின்று பிறகு தன்மீது வைக்கப்பட்ட பாரத்தை நிறுத்துக் காட்டும் தராசு போல, நீதிக்குரிய இலக்கணங்களால் அமைந்து ஓரம் சார்ந்து விடாமல் இருப்பது சான்றோராகிய நீதிபதிகளுக்கு அழகாம்.

English: To incline to neither side, but to rest impartial as the even-fixed scale is the ornament of the wise

41. குறள் 416

அதிகாரம் **(Chapter):** கேள்வி / Listening

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

பொருள் **(Tamil meaning):** எவ்வளவு சிறிதே ஆயினும் நல்லவற்றைக் கேட்டறிய வேண்டும், கேட்ட அந்த அளவிற்கு அவை நிறைந்த பெருமையைத் தரும்.

English: Let a man listen, never so little, to good (instruction), even that will bring him great dignity.

42. குறள் 421

அதிகாரம் **(Chapter):** அறிவுடைமை / The Possession of Knowledge

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.

பொருள் **(Tamil meaning):** அறிவு நமக்கு அழிவு வராமல் காக்கும் ஆயுதம், பகைவராலும் அழிக்க முடியாத உட்கோட்டை / அரண்.

English: Wisdom is a weapon to ward off destruction; it is an inner fortress which enemies cannot destroy.

43. குறள் 595

அதிகாரம் **(Chapter):** ஊக்கமுடைமை / Energy

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.

பொருள் **(Tamil meaning):** நீர்ப்பூக்களின் அடிக்காம்பின் நீளம் நீரின் அளவே. அது போல மக்களின் உயர்வும் அவர்களின் மன ஊக்கத்தின் அளவே.

English: The stalks of water-flowers are proportionate to the depth of water; so is men's greatness proportionate to their minds.

44. குறள் 1033

அதிகாரம் **(Chapter):** உழவு / Farming

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

பொருள் **(Tamil meaning):** பிறர்க்காகவும் உழுது தாமும் உண்டு வாழ்பவரே வாழ்பவர். மற்றவர் எல்லாரும் பிறரைத் தொழுது அவர் தருவதை உண்டு தருபவர் பின்னே செல்பவர் ஆவர்.

English: They alone live by agriculture; all others lead a cringing, dependent life.

45. குறள் 33

அதிகாரம் **(Chapter):** அறன் வலியுறுத்தல் / Assertion of the Strength of Virtue

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல்.

பொருள் **(Tamil meaning):** செய்யக்கூடிய வகையால், எக்காரணத்தாலும் விடாமல் செல்லுமிடமெல்லாம் அறச்செயலைப் போற்றிச் செய்ய வேண்டும்.

English: As much as possible, in every way, incessantly practise virtue

ALL THE VERY BEST!!!!